# Activities of Vavuniya Public Library and Its Challenges: A Survey Research

S.Kalaivani[1], S. Shanmugathasan[2]

**Abstract**

Public libraries are the best contributors to the community. In this way, Vavuniya Public Library is also providing its services to the community. This study is based on the Activities of the Vavuniya Public Library and its challenges. The descriptive study was selected by a random sampling method based on the population. Data were collected through research tools such as questionnaires, discussions, and documentations. Questionnaires were administered to 100 readers randomly selected from the total readers and the Chief Librarian. Data were analyzed with the adaption of the percentage system, rating scale and the MS Excel software. The results were presented in the form of tables, diagrams etc. The results state that the library faces challenges in their service providing and the readers are dissatisfied with the library activities. Current information sources and services of the library seem scarce. Students and higher education students are found to be dissatisfied with the infrastructure facilities of the library. Inappropriate and lack of staff appointments also cause the perception of unsatisfactory services of the library. It is revealed that the significant challenges of the Vavuniya Public Library are inadequate fund allocation, lack of reader-based information resource mobilization, less prominence for electronic information and braille section, and finding difficulties in the provision of essential social information services to the readers. There should be a clear awareness to be adopted among local government officials about the significance of public libraries.

*Keywords*: - Public Library, Library Activities and Challenges, Reader's Satisfaction.

---

[1] Nelukkulam Kalaimagal Maha Vidyalayam, Vavuniya
[2] Library, Vavuniya Campus, University of Jaffna.
Email: shan@vau.jfn.ac.lk

# வவுனியா பொது நூலகத்தின் செயற்பாடுகளும் அதன் சவால்களும்: ஓர் அளவை நிலை ஆய்வு


**ஆய்வுச்சுருக்கம்**

சமூகத்திற்கு மிகச்சிறந்த பங்களிப்பினை வழங்குபவையாக பொது நூலகங்கள் காணப்படுகின்றன. அந்த வகையில் வவுனியா பொதுநூலகமும் தனது சேவைகளை மக்களுக்கு ஆற்றிவருகின்றது. வவுனியா பொது நூலகத்தின் செயற்பாடுகளும் அதன் சவால்களும் என்ற வகையில் இவ்வாய்வு அமைந்திருக்கின்றது. விவரண ரீதியாக அமைந்த இவ்வாய்வானது குடித்தொகை மாதிரி எழுமாற்று முறையில் அமைந்த மாதிரி எடுப்புமுறை மூலம் தெரிவு செய்யப்பட்டது. எழுமாற்று மாதிரி எடுப்புமுறையின் மூலம் மொத்த குடித்தொகையில் 100 குடித்தொகையாளருக்கு வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. அத்துடன் பிரதம நூலகருக்கும் வினாக்கொத்து வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டதுடன் சதவீதமுறை, தரஅளவுச்சட்டம்,ஆளு நுஓஊநுடு என்ற அளவீட்டு முறைகளைப் பயன்படுத்தி அட்டவணைகள் வரைபடங்கள் மூலம் அளிக்கை செய்யப்பட்டு பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. பகுப்பாய்வின்படி நூலகச் செயற்பாடுகளில் பல சவால்களை நூலகம் எதிர்கொள்கின்றது என்பதனையும் வாசகர் தகவல் சேவையைப் பெறுவதில் திருப்தியின்மையை கொண்டிருக்கின்றனர் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளது. அண்மைக்காலத்தோடு இணைந்த ஆவணங்கள், தகவல் சாதனங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. ஆளணிப்பற்றாக்குறை மற்றும் பயிற்சியற்ற, கல்வித்தகைமை குறைந்த ஆளணியினர் காரணமாக வாசகர் நூலக சேவையை பெறமுடியாது இடர்படுகின்றனர். இதனால் நூலக ஒழுங்கமைப்பு, நூலக சேவை என்பதனை வழங்குவதில் சவால்களை எதிர்கொள்கின்றது. இலத்திரனியல் பகுதி, பார்வையற்றோர் பகுதி என்பவற்றிற்கு பொருத்தமான ஆளணியினர் நியமிக்கப்படவில்லை. இது பெரும் குறைபாடாகக் காணப்படுகின்றது. போதிய பண ஒதுக்கீடு இன்மை, வாசகர்களை இலக்காகக் கொண்ட தகவல்வள சேகரிப்பின்மை, இலத்திரனியல் தகவல் வளங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படாமை, வாசகர்களுக்கு அவசியமான சமுதாய தகவல் சேவையை வழங்க முடியாமை என்பன வவுனியா பொது நூலகம் எதிர் கொள்ளும் சவால்களாகும். உள்ளூராட்சி சபை நிர்வாகிகள் மத்தியில் பொதுசன நூலகங்களின் முக்கியத்துவம் பற்றி தெளிவான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படல் வேண்டும்.


***திறவுச் சொற்கள்*** *:- பொது நூலகம், நூலகச் செயற்பாடுகளும் சவால்களும், வாசகர் திருப்தி.*

# வவுனியா பொது நூலகத்தின் செயற்பாடுகளும் அதன் சவால்களும்: ஓர் அளவைநிலை ஆய்வு

## அறிமுகம்(Introduction)

தகவல் வெடிப்புயுகம் என்று கருதப்படுகின்ற இன்றைய காலகட்டத்தில் நூலகத்தின் தேவை, பயன்பாடு நன்கு உணரப்பட்டுள்ளன. மக்களுக்காக மக்களால் மக்களைக்கொண்டு உருவாக்கப்படும் நிறுவனமே பொதுநூலகமாகும். அறிவுத் தேடலையும், தகவல்களையும் வழங்கும் தகவல் மையங்களாக பொது நூலகங்கள் இயங்குகின்றன. இவை இன, மத, மொழி, பால் வேறுபாடோ, வயது வேறுபாடோ இன்றி அனைத்து மக்களிற்கும் சேவைவழங்கும் ஒரு சமூக நிறுவனமாகும்.

பொதுசன நூலகங்கள் சமூகத்தின் கல்வி, கலாசார தகவற் தேவைகளை அடைவதில் உயிருள்ள உந்துசக்தியாக விளங்குவனவாகும். நூலகத்தின் சேகரிப்புக்களும், சேவைகளும் சகலவிதமான பொருத்தமான சாதனங்களைக் கொண்டிருப்பதுடன் இன்றைய நவீன தொழிநுட்பங்களையும் அதேபோல் மரபுமுறைச் சாதனங்களையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். மனித ஆளுமையின், ஆன்மீக, ஒழுக்க, சமூக, கலாசார அம்சங்களின் விருத்திக்குப் பொதுநூலகங்கள் அவசியமானதொன்றாக விளங்குகின்றன.

இந்த வகையில் வவுனியா பொதுநூலகமானது வவுனியா மாவட்டத்தின் நகரத்தின் மத்தியில் அமைந்து காணப்படுகின்றது. இது 2019ம் ஆண்டு தரம்-I ஆகத் தரமுயர்த்தப்பட்டது. இந்நூலகம் பரந்த பிரதேச வாசகர்களுக்கு சேவையை வழங்க வேண்டியுள்ளதால் காலத்திற்கு காலம் பல்வேறு சேவைகளை வழங்கும் செயற்பாட்டையும் ஆரம்பித்து வந்துள்ளது. 1959ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நூலகம் இன்று பாரிய கட்டடத்தொகுதியை கொண்ட நூலகமாக வவுனியா நகர சபையின் கீழ் இயங்கி வருகின்றது. இந்நூலகம் பல செயற்பாடுகளை மேற்கொள்கின்ற போதும் பல சவால்களுக்கும் முகம்கொடுக்கின்றது.

மாறிவரும் உலகிற்கு ஏற்ற வகையில் தகவல் சாதனங்களின் தேவைப்பாடு சர்வதேச, தேசிய, பிரதேச, சமூகரீதியில் அத்தியாவசியமான ஒன்றாக காணப்படுகின்றது. பாமரர் முதல் படித்தவர் வரை வவுனியாப் பிரதேசத்தில் வாழ்வதனால் பல்துறைசார் தொழில்களுக்கு தகவல் சேவை மையமாக இப்பொது நூலகம் செயற்பட வேண்டிய நிலையில் காணப்படுகின்றது. இருப்பினும் இந் நூலகமானது தகவல்சேவையை முழுமையாக வழங்கமுடியாத நிலையில் காணப்படுவதோடு, அதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கையில் சவால்களையும் எதிர்கொள்கின்றது. சவால்களை இணங்கண்டு அவற்றினை இழிவளவாக்குதலும் வாசகர் தேவையை நிறைவு செய்வதாகவும் அமையவேண்டும் என்கின்ற நிலையில் இவ் ஆய்வுப்பிரச்சினை முன்னெடுக்கப்படுகின்றது.

காலத்திற்கு ஏற்ற வகையில் பொது நூலகங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருதல் அவசியமாகும். பொது நூலகங்கள் எமக்குக் கிடைத்த அறிவுப் பொக்கிசங்களாகும். வடமாகாண பொது நூலகர்கள் தொழில்சார் அதிகாரம் மற்றும் பயிற்சிகளுக்கான வாய்ப்புக்கள் குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர் (சண்முகதாசன், 2020).

இலங்கையின் வடமாகாணத்தில் உள்ள பொதுநூலகங்கள் சேகரிப்பு, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனித வளம் ஆகியவற்றில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பொது நூலகங்களின் தற்போதைய நிலையையும், பயனுள்ள சேவைகளை வழங்குவதில் எதிர் கொள்ளும் முக்கிய சவால்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன.நூலகக் கட்டடம், தளபாடங்கள், தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப வசதிகள், அடிப்படை வசதிகள் (நீர், கழிப்பறை, மின்சாரம்) போன்றவை அத்தியாவசிய மற்றும் அவசரத்தேவைகளாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.இந்நூலகங்கள் 26முநூலகர்கள், 30% நூலக உதவியாளர்கள், 16%நூலக சிற்றூழியர்களுடன் செயல்படுகின்றன (சந்திரசேகர், குபேசன், 2017).

யாழ் மாவட்ட பிரதேச சபைக்குட்பட்ட பொது நூலகங்களின் பிரச்சினைகளாக போதிய பண ஒதுக்கீடு இன்மை, திருப்தியான கட்டட தளபாட வசதியின்மை, வாசகரை இலக்காகக் கொண்ட தகவல் வள சேகரிப்பின்மை என்பன இனங்காணப்பட்டிருக்கின்றன. இலத்திரனியல்

தகவல் வளத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. உள்ளூராட்சி சபை நிறுவனங்களின் மத்தியில் பொதுசன நூலகங்களின் முக்கியத்துவம் பற்றித் தெளிவான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். என்பதும் வரையறுக்கப்பட்டிருக்கின்றது. (முருகதாஸ், 2014)

வவுனியா கூமாங்குளம் பொது நூலகத்தில் 55மூ ஆன வாசகர்கள் நூலகத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். இவர்கள் தமக்குத் தேவையான போது மட்டும் நூலகத்தைப் யன்படுத்தி வருகின்றாரகள் என்றும் இவர்களின் வாசிப்புப் பழக்கம் பரீட்சையை மையப்படுத்தி வாசிப்பின் மூலம் அறிவை வளர்ப்பதாகும். வாசகர்களில் 31 - 40 வயதுள்ளவர்கள் 44% நூலகத்திற்கு வருகை தந்துள்ளனர். தமக்குத் தேவையான தகவல்களைப் பெற எனக் கருதுபவர்களே நூலகத்தை நாடி வருகின்றனர். இதற்கான பிரதான காரணம் அவர்களின் சுய தொழில்களும், போதிய நேரமின்மையும், வாசிப்பில் நாட்டம் குறைவுமாகும். (அனுசியா, 2018)

தென்னாபிரிக்காவின் முறயணரடர–யேவயட மாகாணத்தில் வடக்கு நூலகப் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அனைத்து வகையான வாசகர்களும் அவர்களின் வெவ்வேறு வயதுக்குழுக்கள், தொழில் சேவைகள், மற்றும் தகவல் சேவைகளுக்கான அணுகளை எளிதாக்குவதில் பொது நூலக நடவடிக்கைகள் பல்வேறு தகவல் சேவைகளை வழங்குகின்றன. மாறுபட்ட பயனாளர்கள் மாறுபட்ட தகவல் தேவைகளைக் கொண்டுள்ளனர். இத் தகவல் சேவையை வழங்குவதில் சவால்களாக வரையறுக்கப்பட்ட நிதி, திறன்கள் மற்றும் அறிவின் பற்றாக்குறை, தொழிநுட்பம் மற்றும் நேரம் போன்றவை கண்டறியப்பட்டுள்ளன. இவ்வாய்வின் பரிந்துரைகளாக சாத்தியமான ஆட்சேர்ப்பு செய்தல், அதிகரித்த நிதிக்காகப் போட்டியிடுதல், ஆதரவிற்கான பரப்புரை,திறன்களின் தொழிநுட்ப பயிற்சிக்கு உதவுதல் ஆகியவை முன்வைக்கப்பட்டுள்ளன. (Thnashe Mugwisi, Glenrose Yelile Jiyane, 2016) பொதுவாக பொதுநூலகங்கள் தமது செயற்பாடுகளை மேற்கொள்வதிலும் விஸ்தரிப்பதிலும் சவால்களை எதிர்கொள்பவையாகவே காணப்படுகின்றன.

**ஆய்வின் நோக்கம்(Research Objective)**

பொது நூலகம் ஒரு தகவல் சேவை மையமாகக் கருதப்படுகின்றது. வாசகருக்கான தகவல் வளங்கள், வாசகர் இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய தொழிநுட்பச் செயற்பாடுகள், வாசகருக்கான தகவல் வழங்கற் செயற்பாடுகள் என்பவற்றை முன்னெடுப்பதில் பௌதீகவளம், தகவல் சாதனங்கள், ஆளணியினர் போன்றவை செல்வாக்குச் செலுத்துகின்றன. இவ்வாய்வின் நோக்கங்களாக,

1. பொது நூலகம் சமூகத்தின் நாளாந்த செயற்பாடுகளில் வினைத்திறனாக எந்தளவிற்கு செயற்படுகின்றது என்பதனைக் கண்டறிதல்.
2. வாசகர் எதிர்கொள்ளும் சவால்களை இனங்கண்டு கொள்ளல்.
3. சவால்களுக்கான காரணங்களைப் பகுப்பாய்வு செய்தல்.
4. செயற்பாடுகளின் போது எதிர்கொள்ளும் சவால்களை இழிவளவாக்குவதற்கான உபாயங்களைக் கண்டறிதல்.
5. எதிர்கால முன்னேற்றத்திற்கான ஆலோசனைகளை முன்மொழிதல்.

**ஆய்வுமுறையியல்(Research Methodology)**

ஆய்வுப்பிரதேசமாக இலங்கையின் வடமாகாணத்தில் அமைந்துள்ள வவுனியா மாவட்டத்தின் வவுனியா நகரசபைப் பொது நூலகம் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இங்கு தொடர்ச்சியான வாசகர்களாக 200 வாசகர்கள் காணப்படுகின்றனர். இவர்களில் எழுமாற்று மாதிரி எடுப்பு முறையில் 100 வாசகர்களுக்கு வினாக்கொத்து வழங்கப்பட்டு 98 வாசகர்களிடம் இருந்து தரவுகள் பெறப்பட்டது. இத்துடன் பிரதம நூலகருக்கும் வினாக்கொத்து வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. இதைவிட நேரடி அவதானம், கலந்துரையாடல், ஆவணப்பதிவேடுகள் போன்றவற்றின் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

பெறப்பட்ட தரவுகள் சதவீதம், தரவளவுச்சட்டம்,ஆளுநுஓஊநுடு மூலமும் பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணைகள், வரைபடங்கள் மூலம் அளிக்கை செய்யப்பட்டுள்ளன.


## தரவளிக்கையும் தரவுப்பகுப்பாய்வும்(Data Presentation and Data Analysis)

இவ்வாய்வின் போது வாசகர் தேவையை நிறைவு செய்வதில் வவுனியா பொது நூலகத்தின் செயற்பாடுகள் மற்றும் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் பின்வரும் தரவுகள் கிடைக்கப்பெற்றன.

**அட்டவணை 1. நூலக ஆளணியினர்**

| **இல.** | **ஆளணியினர்** | **ஒதுக்கீடு** | **இருப்பு** |
|---|---|---|---|
| 01. | நூலகர் தரம் I | 01 | 01 |
| 02. | நூலகர் தரம் II | 03 | 01 |
| 03. | நூலகர் தரம; III | 06 | 01 |
| 04. | நூலக உதவியாளர் | 04 | 03 (தற்காலிகம்) |
| 05. | சிற்றூழியர் | 05 | 01 |
| 06. | சுகாதார ஊழியர் | 02 | - |
| 07. | புத்தகம் கட்டுனர் (Binders) | 04 | - |

மூலம்: ஆளணிப் ஆவணப்பதிவேடு




வரைபடம் 1. நூலக ஆளணியினர்

இவ்வரைபடத்தின்படி ஆளணியினர் பற்றாக்குறை காணப்படுவதுடன் சுகாதார ஊழியர், புத்தக கட்டுனர் போன்ற ஆளணியினர் நிரப்பப்படாத நிலையையும் காட்டி நிற்கின்றது. இங்கு ஆளணி ஒதுக்கீடு 25 ஆகக் காணப்படுகின்ற போது நிரப்பப்பட்ட ஆளணியினரில் நான்கு பேர் நிரந்தரமானவர்களாகவும்மூவர் தற்காலிகமானவராகவும் உள்ளனர். இவை

நூலகசெயற்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் அதேவேளை வாசகருக்குச் சிறந்த சேவைகளை வழங்குவதிலும் சவாலாகவே காணப்படும்.

**அட்டவணை 2. நூலக ஆளணியினர் கல்வித்தகைமை**

| **இல.** | **கல்வித்தகைமை** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 01. | தரம் 8 | 01 |
| 02. | க.பொ.த. சாதாரணதரம் | 02 |
| 03. | க.பொ.த. உயர்தரம் | 02 |
| 04. | நூலக டிப்ளோமா | 02 |
| 05. | பட்டப்பின் டிப்ளோமா | - |
| 06. | இளமாணி பட்டம் | - |
| 07. | முதுமாணி பட்டம் | - |

மூலம்: நூலகர் வினாக்கொத்து

ஆளணியினரின் கல்வித்தகைமையைப் பொறுத்தமட்டில் உயர் தகைமையாக நூலக டிப்ளோமாவே காணப்படுகின்றது. நூலகம் ஒரு தகவல் மையம். ஆகவே தகவல் வழங்க கூடிய வகையில் கல்வித்தகைமை, தொழிற்தகைமை காணப்பட வேண்டியது அவசியமாகும். இந்நிலைமையும் நூலகத்தின் செயற்பாட்டில் தாக்கத்தை செலுத்துகின்றது.

**அட்டவணை 3. வவுனியா பொது நூலகத்தில் காணப்படும் ஆவணங்கள்**

| **இல.** | **ஆவணங்கள்** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 01. | தமிழ் மொழி | 28500 |
| 02. | ஆங்கிலம் | 9300 |
| 03. | சிங்களம் | 4200 |
| 04. | ***பருவஇதழ்கள்*** | |
| | தமிழ் | 15 |
| | ஆங்கிலம் | 03 |
| | சிங்களம் | 02 |
| 05 | ***பத்திரிகைகள்*** | |
| | தமிழ் | 06 |
| | ஆங்கிலம் | 03 |
| | சிங்களம் | 04 |

மூலம்: ஆவணச்சேர்வு பதிவேடு

ஏறத்தாழ இங்கு 42000 நூல்கள் காணப்படுகின்றன. இவற்றில் மும்மொழி நூல்களும் காணப்படுகின்றன. இருப்பினும் தமிழ் மொழி நூல்கள் 28500 ஆகக் காணப்படுகின்றது. பருவ இதழ்கள் மற்றும் பத்திரிகைகளும் காணப்படுகின்றன. இருப்பினும் உயர் கல்விக்கான பருவஇதழ்கள் மிகக் குறைவாகவே உள்ளன. நூலக ஆவணச் சேர்க்கையின் போது நூலகரின் கருத்துக்கள் உள்வாங்கப்படாமை இங்கு குறைபாடாகக் காணப்படுகின்றது.

**அட்டவணை 4. நூலகப் பயன்பாடு (நூற்றுவீதம்)**

| இல. | பயன்பாடு | நூற்றுவீதம் |
|---|---|---|
| 01. | பொது வாசகர் | 65 |
| 02. | சிறுவர் | 45 |
| 03. | மாணவர் | 52 |
| 04. | ஓய்வு நேர வாசகர் | 48 |
| 05. | உயர் கல்வி ; ஆய்வாளர் | 25 |
| 06. | இலத்திரனியல் சாதனப் பாவனையாளர் | 15 |
| 07. | பார்வையற்றோர் | 10 |

மூலம்: பதிவேடுகள் மற்றும் கலந்துரையாடல் மூலம் பெறப்பட்டவை

பொது வாசகர் பயன்பாடானது 65மூஆக காணப்படும் அதேநேரம் உயர் கல்வி, இலத்திரனியல் சாதனப் பாவணையாளர், பார்வையற்றோர் முறையே 25மூஇ 15மூஇ 10மூஆக காணப்படுகின்றனர். நூலகத்தில் அங்கத்துவத்தினைப் பெற்றுக்கொள்வதில் உள்ள நடைமுறைச்சிக்கல் காரணமாக ஆவணங்களை இரவல் பெறுவதில் வாசகரும், ஆவணங்களை வழங்குவதில் நூலகமும் இடர்படுகின்றது.

### பௌதீகவளங்கள்

வவுனியா பொது நூலகமானது பரந்த இடவசதியுடன் கூடிய ஒரு கட்டிடத்தில் இயங்கிவருகின்றது. போதுமான தளபாட வசதிகள் காணப்படுகின்றன. இங்கு தூர தேசத்தில் இருந்து வரும் மாணவர்கள் பரீட்சைக் காலத்தில் படிப்போர் கூடத்தில் படிக்கக்கூடிய வசதிகள் இருப்பினும் அடிப்படை வசதிகளான நீர், மலசலகூட வசதிகள் பற்றாக்குறையாகவே உள்ளன. சிற்றுண்டிச்சாலை வசதியும் காணப்படவில்லை.


**நிதிவளம்**

உள்ளூராட்சி நிறுவனத்தினால் ஒதுக்கப்படுகின்ற நிதிக்கு அமைவாகவே ஆவணச் சேர்க்கைகள், ஏனைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்நிலையில் தேவைக்கேற்ற வகையில் பொருத்தமான ஆவணங்களை கொள்வனவு செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது.

**அட்டவணை 5. பொது நூலகத்தின் முக்கியமான பிரிவுகளும் சவைகளும் (நூற்றுவீதம்)**

| இல. | பகுதிகள் | திருப்தி | தீர்மானிக்க முடியவில்லை | திருப்தியின்மை |
|---|---|---|---|---|
| 01. | சிறுவர் பகுதி | 25 | 10 | 65 |
| 02. | வாசிப்பு பகுதி | 30 | 15 | 55 |
| 03. | இரவல் வழங்கும் பகுதி | 23 | 13 | 64 |
| 04. | உசாத்துணைப் பகுதி | 21 | 12 | 67 |
| 05. | இலத்திரனியல் பகுதி | 18 | 15 | 67 |
| 06. | பார்வையற்றோர் பகுதி | 24 | 18 | 58 |
| 07. | பத்திரிகை மற்றும் சேகரிப்பு பகுதி | 32 | 10 | 58 |
| 08. | பருவ இதழ் பகுதி | 25 | 11 | 64 |

மூலம்: வாசகர் வினாக்கொத்து




வரைபடம் 2. பொது நூலகத்தின் முக்கியமான பிரிவுகளும் சேவைகளும்

வவுனியா பொது நூலகத்தில் பல்வேறு வகையில் அமைந்த சேவைப்பகுதிகள் காணப்படுகின்ற போதும் வாசகர்களுக்கு அச் சேவைகளில் திருப்தியின்மையே மேலோங்கிக் காணப்படுகின்றது. அதாவது 65% இற்கு மேற்பட்டோர் திருப்தியின்மையை வெளிப்படுத்தியுள்ள நிலையில் 35% இற்கும் குறைவானோரே திருப்தியினை வெளிப்படுத்தியுள்ளனர். ஏனைய பிரிவுகளாலும் வழங்கப்படும் சேவைகள் குறைந்தளவான திருப்த்தித்தன்மையை வெளிப்படுத்தி நிற்பதை காணமுடிகின்றது.

**அட்டவணை 6. நூலக ஒழுங்கமைப்பு**

| இல. | துலங்கல் | தரமிடும் அளவுப்பெறுமானம் |
|---|---|---|
| 01. | நூலக அமைவிடம் | 4.43 |
| 02. | நூலக கவின்நிலை | 2.2 |
| 03. | பௌதீக வளம் | 2.57 |
| 04. | நூல் பகுப்பாக்கம் | 2.8 |
| 05. | நூல் பட்டியலாக்கம் | 2.32 |
| 06. | இறுவட்டு சாதனங்கள் | 1.98 |
| 07. | நூல்களின் பௌதீக நிலை | 2.53 |


மூலம்: நூலகர் வினாக்கொத்து

தரமிடும் அளவுகோல் பெறுமானத்தின்படி, நூலக அமைவிடமானது 4.43 பெறுமானத்தைக் கொண்டிருப்பதால் வாசகர்களுக்கு திருப்தியானதாக உள்ளதாகவும், ஏனையவை தரமிடும் சராசரி அளவுப் பெறுமானம் 3 இலும் குறைவாகக் காணப்படுவதால் அவை பற்றாக்குறையான தன்மையையும் காட்டி நிற்கின்றன.

**அட்டவணை 7. வாசகர் தகவல் சாதனப் பயன்பாடு (நூற்றுவீதம்)**

| இல. | தகவல் சாதனங்கள் | திருப்தி | தீர்மானிக்க முடியவில்லை | திருப்தியின்மை |
|---|---|---|---|---|
| 01. | பொது அறிவு தகவல் சாதனம் | 30 | 10 | 60 |
| 02. | ஓய்வு பயன்பாட்டு தகவல் சாதனம் | 35 | 15 | 50 |
| 03. | பரீட்சை வெற்றிக்கான தகவல் சாதனம் | 25 | 08 | 67 |
| 04. | உயர் கல்வி | 20 | 10 | 70 |
| 05. | தொழில்முறைக் கல்வி | 20 | 08 | 72 |
| 06. | இரவலாகப் பெறும் தகவல் சாதனம் | 40 | 10 | 50 |

மூலம்: வாசகர் வினாக்கொத்து




**வரைபடம் 3.வாசகர் தகவல் சாதனப் பயன்பாடு**

வாசகர்கள் தகவல் சாதனங்களைப் பயன்படுத்துவதில் திருப்தித்தன்மை குறைவானதாகவும், திருப்தியின்மை தன்மையே கூடுதலாக காணப்படுவதையும் வரைபடம் - 2 விளக்கி நிற்கின்றது. பொருத்தமான சாதனங்களை வழங்குவதில் நூலகம் இடர்களை எதிர் நோக்குகின்றது. பொது அறிவு, ஓய்வு பயன்பாடு,மாணவர் பரீட்சை வெற்றிக்கான தகவல் சாதனங்களைப் பயன்படுத்துவதில் முறையே 30%, 35%, 25% என்ற திருப்தி நிலையையும; 60%, 50%, 67% மான திருப்தியின்மையையும் காட்டி நிற்கின்றது.

## முடிவுரையும் விதப்புரையும்(Conclusion and Recommendations)

வவுனியா பொது நூலகத்தின் கட்டிடமும் இட அமைவும் பொருத்தமானதாகக் காணப்படுகின்ற போதிலும் அடிப்படைப் பௌதீக வளங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. பொருத்தமான வகையில் (உயர் கல்வி) ஆவணங்கள் இன்மை, வாசகர் தகவலை அடைவதற்கான பயிற்சி பெற்ற தகவல் வழிகாட்டுனர் காணப்படாமை, இலத்திரனியல் பகுதி, பார்வையற்றோர் பகுதி, உசாத்துணைப்பகுதி, பருவ இதழ் பகுதி போன்ற பகுதிகளின் செயற்பாடுகள் முன்னெடுப்பதில் இடர்பாடுகள் காணப்படுகின்றமையால் நூலக ஒழுங்கமைப்பிலும், சாதனங்களைப் பயன்படுத்துவதிலும் சவால்களை எதிர் கொள்கின்றனர். இதன் காரணமாக நூலகத்தில் வாசகர்கள் பெறும் பயன்பாடும் குறைவாகவே காணப்படுகின்றன. ஆய்வுத் தரவுகளின் அடிப்படையில் ஆளணியின் பற்றாக்குறை, ஆளணியினர் பொருத்தமான கல்வித்தகைமை, தொழிற்தகைமையைக் பெற்றுக்கொள்ளாமை, சேவைக்கால பயிற்சிகள் இன்மையும்மேற்படி சவால்களுக்கு காரணமாகின்றன. மாறிவரும் காலத்திற்கு பொருத்தமான ஆவணச் சேர்க்கைகள் குறைவாகக் காணப்படுகின்றன. இதற்கு நிதியும் ஒரு காரணமாக அமைகின்றது.

நூலக சவால்களை வெற்றி கொள்ளும் வகையிலும், வாசகர் தேவையை நிறைவு செய்யும் வகையிலும் பல மேம்பாட்டு திட்டங்களை மேற்கொள்ளலாம்.

உள்ளூராட்சி சபைகள் பொது நூலகம் இலாப நோக்கற்ற சேவை மையம் என்பதை முக்கியப்படுத்திக் கொள்ள வேண்டும். கூடுதலான நிதியை நூலகத்திற்கு ஒதுக்க முயற்சி செய்தல் வேண்டும். நிர்வாகிகள் மத்தியில் பொதுசன நூலகத்தின் முக்கியத்துவம் பற்றி தெளிவான விழிப்புணர்பு ஏற்படுத்தப்படல் வேண்டும். பொருத்தமான ஆளணியினரை வெற்றிடங்களுக்கு அமர்த்துதல்,இலத்திரனியல் வளங்களின் பயன்பாடு அதிகரித்து வருகின்றமையால் சேவைக்காலப் பயிற்சியினை வழங்குதல், ஆளணியினரின் கல்வித்தகைமையை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் அவசியமாகின்றது. சோலைவரி பற்றுச்சீட்டின்றி நூலக அங்கத்துவத்தினை வழங்குவதன் மூலம் நூல்களை இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் பாடசாலைகளுடன் தொடர்பாடலை வைத்திருத்தலும் முக்கியமானதாகும். மேலும் நூலக ஆவணச் சேர்க்கை நடவடிக்கைகளின் போது நூலகரின் கருத்துக்கள் உள்வாங்கப்படுவதுடன் அவற்றுக்கு முன்னுரிமையளிக்கப்படவும் வேண்டும்.

உள்ளூராட்சி சபை நிர்வாகிகளின் உதவியுடன் பொது நூலகத்தின் அடிப்படைத் தேவைகளை மேம்படுத்தி, செயற்பாடுகளை விரிவுபடுத்துவதன் மூலம் மக்களின் தகவல் தேவையைப் பு'ர்த்தி செய்துபிரதேச மேம்பாட்டினை ஏற்படுத்தலாம்.

## உசாத்துணைகள்(References)

அனுசியா, சி. (2018). இன்றைய கிராம மக்களின் வாசிப்பு பழக்கமும் எதிர்கால தேவைகளும்கூமாங்குள பொதுநூலகத்தை மையப்படுத்திய ஆய்வு. *Proceedings of theNational Library Research Symposiumon Promoting Research Culture Through knowledge sharing*(pp. 183-195)

முருகதாஸ், கோ. (2014). யாழ்மாவட்ட பிரதேச சபைக்குட்பட்ட பொதுநூலகங்கள் பற்றிய ஓர் மதிப்பீடு. *Srilanka Library Review*, 28.

Chandrasekar, K., & Kupeshan, R. (2017). Public Library System in the Northern Province of Sri Lanka: Contemporary Issues and the Way Forward. Proceedings of the UGC sponsored International Conference on Knowledge resources and Library technologies.

Mugwisi, T., Jiyane, G. V., & Fombad, M. C. (2018). Public libraries as facilitators of information services: A case study of selected libraries in KwaZulu-Natal. *Information Development*, *34*(1), 31–43. https://doi.org/10.1177/0266666916672718

Shanmugathasan, S. (2020). Factors influencing the job satisfaction of librarians of the public libraries in Northern Province, Sri Lanka.*Sri Lanka Library Review*, 34(02).